DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 597 / 2023 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 4 |
| Name | : லட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் வெள்ளைமலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி குணசேகரனுக்கு எங்கள் கிணற்றிலிருந்து அவர் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு மின்வயரை இழுத்து சென்றார். இந்த மின்வயரை தவறுதலாக போட்டு சென்றதற்காக எனது மகள் உஷாகனி மின்வாரியத்தில் உள்ள அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளார். எனது மகள் புகார் செய்துள்ளதால் என்னையும் , மகளையும் கழுத்தை அறுத்து போட்டுவிடுவேன் என்று எதிரி கூறினார். சுமார் 2 1/2 வருடத்திற் கு முன்பு தோட்டத்தில் வீட்டில் இருந்து வரப்பு வழியாக அதிகாலை 6 மணிக்கு மாட்டை பிடித்து கொண்டு சென்றேன். மாட்டை தோட்டத்தில் கட்டி விட்டு திருமபி வரும் போது காலில் வயர் தட்டியது. நான் கீழே குனிந்து மின்வயரை பிடித்து இழுக்கும் போது எனது வலது கையில் மின்சாரம் பாய்ந்து வலது

கையில் 2 விரல்கள் பாதிப்படைந்து துண்டிக்கப்பட்டுள்ளது. (அதை சாட்சி நீக்கப்பட்ட விரல்களை காண்பிக்கிறார். நான் கீழே விழுந்து விட்டேன். நான் கண் விழித்து பார்த்த போது உசிலம்பட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். உசிலம்பட்டி மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். கையில் இருந்த காயம் அதிகமானதால் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு 2 வாரங்கள் உள்நோயாளியாக இருந்தேன். அறுவை சிகிச்சை செய்து வலது கையில் 2 விரல்கள் அகற்றப்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு காரணம் எதிரி குணசேகரன் போட்ட மின்வயரால் ஆனது. போலீசார் என்னை உசிலம்பட்டி மருத்துவமனையில் விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

என்னை போலீசார் 2 முறை விசாரித்தார்கள். சம்பவம் நடந்து எத்தனை நாட்களுக்கு பிறகு விசாரித்தார்கள் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. முதல் விசாரணையில் எனது மகள் புகார் செய்துள்ளதால் உன்னையும், உனது மகளையும் கழுத்து அறுத்து போட்டுவிடுவேன் என்று எதிரி கூறியதாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. முதல் விசாரணையில் நான் அதிகாலை 6 மணிக்கு மாட்டை தோட்டத்தில் கட்டி வைத்து விட்டு திரும்பும் போது வயர் தட்டியது என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கீழே விழுந்து கரண்ட் சாக்கால் மயங்கி விட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். அ.சா.1 எனது மகள். அசா.2 எனது தம்பி மனைவி. அ-சா.3 தேவி எனது தம்பி மனைவி. எனது மகள் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் மயக்கமாக இருந்தேன். இது சம்பந்தமாக நானும் எனது மகளும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் எனது மகள் தான்

கொடுத்தார், நான் மயக்கமாக இரு ந்தேன். புகாரில் எனது மகள் என்ன எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பேரன் தான் மருத்துவமனைக்கு சேர்த்தார் என்றால் எனது மகள் தான் சேர்த்தார். வெள்ளம்பலம்பட்டிக்கும், உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கும் சுமார் 6 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான். ஆட்டோவில் 20 நிமிடத்தில் வரலாம் என்றால் எனக்கு தெரியாது. வெள்ளம்பலம்பட்டியில் இருந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டேன் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கிணற்றில் தண்ணீர் பாய்ச்சுவதில் எதிரிக்கும், எனதுமகளுக்கும் 1/4 பங்கு உரிமை உள்ளது என்றால் அவ்வாறு சொல்கிறார்கள், வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எனது மகள் நல்லமாபட்டியில் குடியிருந்து வருகிறார். நல்லமாபட்டிக்கும், வெள்ளைமலைபட்டிக்கும் எத்தனை கிலோமீட்டர் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டிற்கும் தோட்டத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் பக்கம் தான். நான் வெள்ளம்பலபட்டியில் சுமார் 20 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் , என்றால் சரிதான். சம்பவம் நடந்த தோட்டத்தில் விவசாயம் செய்கிறேன் என்றால் ஆடுமாடுகளை மேய்த்து வருகிறேன். சம்பவத்திற்கு பிறகு கை விரல்கள் போனதால் ஆடுமாடுகளை மேய்ப்பதற்கு கஷ்டப்படுகிறேன். கடந்த 20 வருடங்களாக சாட்டப்பட்டிக்கும், கிணற்றுக்கும் இடையே செல்லும் பாதையை தான் பயன்படுத்தி வந்தோம் என்றால் சரிதான். மேற்படி பாதை வழியாக தான் கிணற்றுக்கு மின்சார வயர் செல்கிறது என்றால் சரிதான். நான் தான் கவனக்குறைவால் மின்சார வயரை மிதித்ததால் மின்சாரம் தாக்கியது என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் புகார் கொடுப்பதற்கும், மருத்துவமனைக்கு செல்வதற்கும் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மின்சார இணைப்பு எதிரியின்

பெயரில் இருப்பதால் எதிரியின் பெயரை தண்ணீர்பிரச்சினை காரணமாக வழக்கு நிலுவையில் இருப்பதால் பொய்புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் தொடர்வில்லை என்றால் சரியல்ல-

மவி இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.25 17:50:14 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.